# வல்வை ஆதிசக்தி நலன்புரிச் சங்கம்
# ஐக்கிய இராச்சியம் (UK)

தலைவர் / செயலாளர்

அன்படையீர்

இத்துடன் என்னால் 01.11.2016 திகியிடப்பட்டு ஆதிகோவிலடி மண்ணில் இயங்கும் ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றை இணைக்கின்றேன்.

தங்களுக்கென அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை மீண்டும் கீழே காணலாம்.

இதன்படி ஏறக்குறைய இற்றைக்கு இரண்டு வுருடங்களுக்கு முன்பிலிருந்து என்னால் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அதாவது ஆவணப்படுத்தலுக்கான தரவுகளை எந்த நிறுவனத்திடமிருந்தும் சரியாக பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆதிகோவிலடி மண்ணில் பிறந்த நான் எனது வரராற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் உள்ளேன் என்பதை நீங்களும் அறிவீர்கள்.

உங்களது அமைப்பு ஆதிகோவிலடி மக்களுக்காக பல அரியசேவைகளை ஆற்றி வருவதை நானும் அறிவேன். அவற்றுள் நான் குறிப்பிடக் கூடியவை கீழ்வரும் செயற்பாடுகளுக்காக நீங்கள் செய்யும் நிதி உதவிகளும் ஆற்றும் ஆலோசனைகளும். ஆகும்.

1. ஆதிவைரவர் கோவில் புனருத்தாரனம்
2. குமருகுருவாடி காணிக் கொள்வனவு
3. ஆதிசக்தி கல்வி மன்றம்

இதற்கு மேலும் பல சேவைகளை நீங்கள் ஆற்றி வருவது எனது அறிவிற்கு எட்டாமல் இருக்கலாம். இவை பற்றி சட்டத்திற்கு அமைய முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. எனவே தயது செய்து காலகாலமாகவும் பின்னர் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும் வண்ணமும் உரிய நடவெடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தற்பொழுது இருக்கும் உங்கள் நலன்புரிச் சங்கத்தை வினையமாக கேட்டுக்கொள்கிறேன்.

**எனது லண்டன் விஜயமும் உங்கள் சங்கத்தின் தொடர்புகளும்**

எனது மனைவியுடன் 2009 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதமளவில் நான் U.K வந்திருந்தேன்.

20.09.2009 ஆம் திகதி எங்களை உங்கள் சங்கத்தினர் வரவேற்று விருந்துபசாரம் அளித்ததை இங்கு நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அங்கு நடந்த கலந்துரையாடல் பற்றிய விபரங்கள் சிலவற்றை நான் ஆவணப்படுத்தியுள்ளேன். ஆவற்றை தங்களுக்கும் அப்போதே அனுப்பி வைத்துள்ளேன்.

அவ் ஆவணங்களும் ஏனைய சங்கத்துடன் தொடர்புடைய ஆவணங்களும் நிர்வாக சபைகள் மாறிய போதும் சரியாக பேணப்பட்டு வருகின்றதா என்பதையும் நான் அறியேன்!

இருந்தும் என்னுடைய கோப்பில் (file) இருந்த தங்கள் நலன்புரிச் சங்கம் சம்மந்தமான கீழ்வரும் சில ஆவணங்களை இவ் ஆக்கத்தில் உள்ளடக்க ஆர்வம் கொண்டுள்ளேன்.

1. **இத்துடன் ஆதிசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெற்று மீளச்செலுத்தாதவர்களின் பட்டியல் மீண்டும் இணைக்கப்படுகிறது.**
2. **இலங்கை வங்கியில் கடன்பெற்று மீளச் செலுத்தாதவர் விபரம்.**
3. **3.போரூட்டில் சேமிப்பு கணக்குகளை பேணி எம்மீது நம்பிக்கை வைத்திருந்த சேமிப்பாளருக்கு போரூட்டால் செலுத்தப்பட வேண்டிய விபரங்கள் வருமாறு.**

**அ.சிறுவர் சேமிப்பு கணக்கு**
**ஆ.சாதாரண சேமிப்பு கணக்கு**

01.01.2001 திகதியிடப்பட்டு

**"அன்பார்ந்த ஆதிகோவிலடி மக்களே உங்கள் சிந்தனையை எம் பக்கம் திருப்புங்கள"** என்ற தலைப்பின் கீழ் போரூட் நிறுவனத்தால் ஆதிகோவிலடி மக்களிடையே விநியோகிக்கப்பட்ட இரண்டு பங்கங்களை கொண்ட பிரசுரத்தை கீழே காணலாம்.

இறுதி ஆவணமாக தங்கள் சங்கத்தினால் 12.03.2018ல் திகதியிடப்பட்டதும் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரால் ஒப்பமிடப்பட்டதுமான கடிதம் யாரோ ஒரு நலன்விரும்பி மூலம் 15.04.2018இல் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதன் பிரதியையும் கீழே காணலாம்.

இக்கடிதத்தின்படி என்னால் 01.11.2016இல் திகதியிடப்பட்டதும் இவ் ஆக்கத்துடன் பிரதியொன்று அனுப்பப்பட்டதுமான கடிதத்தில் கோரியபடி ***தங்களிடம் உரிய பதிவுகள் எதுவும் இல்லையென*** தெரிவித்துள்ளீர்கள்.

எனினும் இக்கடிதத்தை எனக்கு அனுப்பியமைக்காக நான் நன்றியவனுடையாக உள்ளேன்.

**குறிப்பு** – மேற்கூறிய விடயங்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டு உங்கள் நிர்வாக சபை கூடும் பொழுது உரிய நடவெடிக்கைகளையும் ஆலோசனைகளையும் எனக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

போரூட் சிக்கனகடன்வழங்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் கடன்களை பெற்று அவற்றை மீளச் செலுத்தாதோர் பலர் அல்லது அவர்களுடைய உறவினர்கள் அவற்றை மீளச்செலுத்த கூடிய நிலையில் இன்று உள்ளார்கள்.

எனவே உங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி அவர்களிடம் கடன்களை அறவிட வழி செய்து தருவதன் மூலம் முதலில் சிறுவர்களுடைய சேமிப்பையும் மற்றும் சாதாரண சேமிப்பாளர்களுடைய வைப்புக்களில் ஒரு பகுதியையாவது செலுத்தி நான் என்னுடைய வரலாற்று கடமையை ஈடேற்ற தங்கள் உதவியை நாடி நிற்கின்றேன்.

இவ்வாக்கத்தினை கிரகித்து உரிய நடவெடிக்கைகளை எடுக்குமாறு மீண்டும் ஒருமுறை கேட்டு நிற்கின்றேன்.

அத்துடன் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ள எமது ஆதிகோவிலடி மண்ணில் உள்ள இளைஞர் யுவதிகளைக் கொண்டு மீண்டும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தை ( Forut bank) இயங்க வைக்கவும் தங்கள் பணியையும் பங்களிப்பையும் நல்குமாறு மிகவும் அக்கறையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## நன்றி

இவ்வண்ணம்.

ஆதிகோவிலடி மண்ணையும் மக்களையும் நேசிக்கும்

நடராஜா சிவரட்ணம் (வல்வை ஆதிகோவிலடிஜெயம்)

Retired assistant general Manager

Bank of Ceylon – Northern province

01.10.2018